(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. **67.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2021 ஏப்ரல் 08 வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**, சபாநாயகர்

**கௌரவ ரன்ஜித் சியம்பலாபிடிய,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ அங்கஜன் இராமநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ மஹிந்த அமரவீர,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே,** கமத்தொழில் அமைச்சர்

**கௌரவ தினேஷ் குணவர்தன,** வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,** வர்த்தக அமைச்சர்

**கௌரவ ஜனக பண்டார தென்னகோன்,** அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** தொழில் அமைச்சர்

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா,** கடற்றொழில் அமைச்சர்

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார,** நீர்வழங்கல் அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,** பெருந்தோட்ட அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்,** கல்வி அமைச்சர்

**கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து,** நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** சுற்றுலாத்துறை அமைச்சர்

**கௌரவ சீ.பீ. ரத்நாயக்க,** வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ சமல் ராஜபக்ஷ,** நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் மற்றும் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ காமினி லொக்குகே,** போக்குவரத்து அமைச்சர்

**கௌரவ (திருமதி) பவித்ராதேவி வன்னிஆரச்சி,** சுகாதார அமைச்சர்

**கௌரவ திலும் அமுனுகம,** வாகன ஒழுங்குறுத்துகை, பேரூந்துப் போக்குவரத்துச் சேவைகள் மற்றும் புகையிரதப் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சீதா அரம்பேபொல,** திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** கூட்டுறவுச் சேவைகள் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிறிபால கமலத்,** மகாவலி வலயங்களை அண்டியுள்ள கால்வாய்களின் அகழிகள் மற்றும் குடியிருப்புக்கள் பொது உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா,** நகர அபிவிருத்தி, கரையோரப் பாதுகாப்பு, கழிவுப் பொருள் அகற்றுகை, சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டி.வீ. சானக,** விமானச் சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய முறைகளின் மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** கிராமிய வயல் நிலங்கள் மற்றும் அண்டியுள்ள குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியங்கர ஜயரத்ன,** வெளிநாட்டு தொழில்வாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) சன்ன ஜயசுமன,** ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தயாசிறி ஜயசேக்கர,** பத்திக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜீவன் தொண்டமான்,** தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா,** மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, அறநெறிப் பாடசாலைகள், கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ துமிந்த திசாநாயக்க,** சூரிய சக்தி, காற்று மற்றும் நீர் மின்னுற்பத்தி கருத்திட்ட இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சனத் நிசாந்த,** கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் கருத்திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அருந்திக்க பர்னாந்து,** தென்னை, கித்துல் மற்றும் பனை செய்கைகள் மேம்பாடு மற்றும் அவை சார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,** ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சுசில் பிரேமஜயந்த,** கல்விச் சீர்திருத்தங்கள், திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாடு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விஜித பேருகொட,** அறநெறிப் பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் பிக்குமார் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணவீர,** பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ,** நெல் மற்றும் தானியவகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழ வகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாட்டு, விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிமல் லான்சா,** கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை அபிவிருத்தி மற்றும் அதுசார்ந்த கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விதுர விக்ரமநாயக,** தேசிய மரபுரிமைகள், அரங்குக் கலைகள் மற்றும் கிராமியக் கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பல நாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தேனுக விதானகமகே,** கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜயந்த சமரவீர,** களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள், துறைமுக வழங்கல் வசதிகள், இயந்திரப் படகுகள் மற்றும் கப்பற் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ செஹான் சேமசிங்க,** சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்,** கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கனக ஹேரத்,** கம்பனித் தோட்டங்களைச் சீர்திருத்துதல், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் சார்ந்த பயிர்ச்செய்கை, தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்**

**கௌரவ அமரகீர்த்தி அதுகோரள**

**கௌரவ சம்பத் அதுகோரல**

**கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க**

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ அஸோக அபேசிங்ஹ**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்**

**கௌரவ தவராஜா கலை அரசன்**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

கௌரவ டிரான் அலஸ்

கௌரவ நஸீர் அஹமட்

கௌரவ திஸகுட்டி ஆரச்சி

கௌரவ எம். உதயகுமார்

கௌரவ (மேஜர்) பிரதீப் உந்துகொட

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன

கௌரவ அகில எல்லாவல

கௌரவ லலித் எல்லாவல

கௌரவ செல்வராசா கஜேந்திரன்

கௌரவ கோவிந்தன் கருணாகரம்

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ சாகர காரியவசம்

கௌரவ பைஸால் காசிம்

கௌரவ ஜயந்த கெட்டகொட

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ உதயன கிரிந்திகொட

கௌரவ ஜகத் குமார

கௌரவ கெவிந்து குமாரதுங்க

கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி

கௌரவ அ. அரவிந்த் குமார்

கௌரவ வேலு குமார்

கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு

கௌரவ நாலக பண்டார கோட்டேகொட

கௌரவ மனோ கணேசன்

கௌரவ (திருமதி) டயனா கமகே

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ பிரேமலால் ஜயசேக்கர

கௌரவ குலசிங்கம் திலீபன்

கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்

கௌரவ ஷான் விஜயலால் த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ சாமர சம்பத் தசநாயக

கௌரவ அநுர திசாநாயக்க

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ சாரதீ துஷ்மந்த

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ எச். நந்தசேன

கௌரவ கயாஷான் நவனந்த

கௌரவ அசங்க நவரத்ன

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ சு. நோகராதலிங்கம்

கௌரவ புத்திக பத்திறண

கௌரவ அனுப பஸ்குவல்

கௌரவ நிமல் பியதிஸ்ஸ

கௌரவ டிலான் பெரேரா

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்

கௌரவ நலின் பிரனாந்து

கௌரவ ஹரின் பிரனாந்து

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸாந்தி

கௌரவ சஜித் பிரேமதாச, பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ சாந்த பண்டார

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ சுதத் மஞ்சுல

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ கே. காதர் மஸ்தான்

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்

கௌரவ மொஹமட் முஸம்மில்

கௌரவ அநுர பிரியதர்ஷன யாபா

கௌரவ வசந்த யாப்பாபண்டார

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ நிபுண ரணவக

கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர

கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க

கௌரவ அலி சப்ரி ரஹீம்

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ அஜித் ராஜபக்ஷ

கௌரவ குணதிலக ராஜபக்ஷ

கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்

கௌரவ எம். ராமேஷ்வரன்

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ வருண லியனகே

கௌரவ காமினி வலேபொட

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ

கௌரவ க.வி. விக்னேஸ்வரன்

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான

கௌரவ மதுர விதானகே

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண

கௌரவ சந்திம வீரக்கொடி

கௌரவ (சனாதிபதி சட்டத்தரணி) ஜயந்த வீரசிங்க

கௌரவ டீ. வீரசிங்க

கௌரவ வீரசுமன வீரசிங்ஹ

கௌரவ திலிப் வெதஆரச்சி

கௌரவ குமார வெல்கம

**கௌரவ சிவஞானம் சிறீதரன்**

**கௌரவ மஹிந்த சமரசிங்ஹ**

**கௌரவ மைத்ரீபால சிறிசேன**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ ஜோன் செனவிரத்ன**

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன**

**கௌரவ அப்துல் ஹலீம்**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ மர்ஜான் பளீல்**

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திருமதி குஷானி ரோஹனதீர, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1. ***சபாநாயகரின் அறிவித்தல்கள்***: சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:—

"இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 66(ஈ) பிரகாரம் கம்பஹா தேர்தல் மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ரன்ஜன் ராமநாயக்கவின் பாராளுமன்ற உறுப்பினராக இல்லாதொழிந்ததால் ஒன்பதாவது பாராளுமன்றத்தின் உறுப்பாண்மையில் வெற்றிடமொன்று ஏற்பட்டுள்ளதென்று தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளருக்கு அறிவித்து பாராளுமன்றச் செயலாளர் நாயகம் அவர்களினால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் தொடர்பிலான உண்மையான நிலைப்பாட்டை சபையின் கவனத்திற்கு கொண்டுவர நான் விரும்புகிறேன்.

அரசியலமைப்பின் 105(3) ஆம் உறுப்புரையின் கீழ் தண்டிக்கப்படக் கூடிய வகையில் நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்காக 2021 சனவரி 12 ஆம் திகதி உயர் நீதிமன்றத்தினால் கௌரவ ரன்ஜன் ராமநாயக்கவுக்கு குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டு 4 வருடங்களுக்கு கடூழிய சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. அரசியலமைப்பின் 66(ஈ) ஏற்பாடுகளின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தினால் இத்தண்டனை விதிக்கப்பட்டது. இவ்ஏற்பாடுகள் குறிப்பிடுவதாவது "89 ஆம் அல்லது 91 ஆம் உறுப்புரையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தகைமையீனத்துக்கு ஓர் உறுப்பினர் இலக்காகினால் அவரது ஆசனம் வறிதாதல் வேண்டும்." அரசியலமைப்பின் 89(ஈ) உறுப்புரை குறிப்பிடுவதாவது "எவரேனும் ஆள் பின்வரும் தகைமையீனங்களுள் எதற்கேனும் உட்பட்டவராயிருந்தால், சனாதிபதிக்கான அல்லது பாராளுமன்ற உறுப்பினருக்கான தேர்தலில் தேருநராகவிருப்பதற்கு அல்லது ஏதேனும் மக்கள் தீர்ப்பில் வாக்களிப்பதற்குத் தகைமையுடையவராதல் ஆகாது. அதாவது, இரண்டாண்டுகளுக்குக் குறையாதவொரு காலத்திற்கான மறியற்றண்டனையால் தண்டிக்கப்படக்கூடிய தவறொன்றுக்காக ஏதேனும் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் பின்னர் அதனால்

விதிக்கப்பட்ட ஆறு மாதங்களுக்குக் குறையாத ஒரு காலத்திற்கான மறியற்றண்டனையை (அது எப்பெயரினால் அழைக்கப்படினுஞ் சரி) இப்போது அனுபவித்து வருபவராயிருந்தால், அல்லது நேர்முற்போந்த ஏழு ஆண்டுக் காலப்பகுதியின் போது அத்தகைய தண்டனை அனுபவித்து முடித்தவராயிருந்தால், அல்லது மரண தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டவராயிருந்தால், அல்லது அத்தகைய மரண தண்டனைத் தீர்ப்பை நிறைவேற்றுவதற்குப் பதிலாக அளிக்கப்பட்ட ஆறு மாதங்களுக்கு குறையாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனையை அனுபவிப்பராயிருந்தால், அல்லது நேர்முற்போந்த ஏழு ஆண்டுக் காலப் பகுதியின் போது அத்தகைய தண்டனையை அனுபவித்து முடித்தவராயிருந்தால்: ஆயின், இப்பந்தியின் கீழ்த் தகைமையற்றவராக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு கட்டற்ற மன்னிப்பு அளிக்கப்பட்டால், அத்தகைய தகைமையீனம், அம்மன்னிப்பு அளிக்கப்பட்ட தேதியிலிருந்து இல்லாதொழிதல் வேண்டும்.

இதன் பிரகாரம், சட்ட செயன்முறைகளின் படி, உயர் நீதிமன்றத்தினால் குற்றத் தீர்ப்பு மேற்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து கௌரவ ரன்ஜன் ராமநாயக்கவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வறிதாகின்றது. இருப்பினும், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட காரணத்தினால் தான் பாராளுமன்ற ஆசனத்தை இழக்கவில்லையென்று தெரிவித்து தனது சட்டத்தரணிகள் மூலமாக ஆணை மனுவொன்றை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து இருந்ததுடன், கௌரவ ரன்ஜன் ராமநாயக்கவின் ஆசனத்தில் வெற்றிடமொன்று ஏற்பட்டுள்ளது என தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளருக்கு பாராளுமன்றச் செயலாளர் நாயகம் அறிவிப்பதை தடுப்பதற்கு தடையொன்றை அல்லது தடைப்படுத்து உத்தரவொன்றை வழங்கும் படி நீதிமன்றத்தை கோரியிருந்தார். மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்ளாததுடன் எதிர்வாதிக்கு எவ்விதமான முறைசார்ந்த அறிவித்தலையும் வழங்காமல் வழக்கை தள்ளுபடி செய்தது. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட ஆணை மனு தள்ளுபடி செய்யப்பட்டமையினால், வெற்றிடம் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளருக்கு பாராளுமன்றச் செயலாளர் நாயகம் அறிவிப்பது தொடர்பில் தடை விதிக்கின்ற மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தற்காலிக தடையுத்தரவும் இல்லாதொழிகின்றது.

சூழ்நிலைகளில், இந்த வழக்குத் தொடர்பான ஆணை விடயத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பூரணமான கட்டளையினை எடுத்தாள்வதற்கு அரசியலமைப்பின் உறுப்புரை 89(ஈ) இன் கீழான மேலேயுள்ள அனைத்துத் தேவைப்பாடுகளும் பூர்த்திசெய்யப்படுகையில், பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது: “பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் பிரிவு 64(1) இன் கீழ் தேர்தல் ஆணைக்குழுவிற்குத் தொடர்பாடல் ஒன்றினை அனுப்பும் செயலானது, போதிய அதிகாரப் பயன்பாடல்லாது 1 ஆம் எதிர்வாதியினால் வேண்டுமென்றே செய்யப்பட்ட ஒரு செயலுக்கு ஒப்பானதாகும் எனும் கற்றறிந்த மேலதிக சிரேஷ்ட மன்றாடியதிபதியின் வாதத்தினை நான் ஏற்கின்றேன். வேறு வார்த்தைகளில் கூறவதாயின், வெற்றிடம் ஒன்று காணப்படுவது தெளிவாகத் தெரியுமிடத்து, அவ்வாறான வெற்றிடம் பற்றித் தேர்தல் ஆணைக்குழுவுக்குத் தெரிவிப்பதற்குச் செயலாளர் நாயகம் சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுகின்றாரேயன்றி அவருக்கு வேறு தெரிவு இல்லை. அவ்வாறு செய்கையில் அவர் முற்றுமுழுவதும் நிருவாகச் செயல்முறைமையையே மேற்கொள்கின்றார். முற்றுமுழும் நிர்வாகச் செயன்முறையை மேற்கொள்வது, உறுதி கேள் பேராணையினால் இல்லாமலாக்கப்படுவதற்கோ அல்லது தடைப்பேராணையின் எவ்விதமான கட்டுப்பாடுகளுக்கோ உட்படாது என நான் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன். இந்தச் சந்தர்ப்பத்தில் செயலாளர் நாயகம் செயற்படத் தவறினால், அவரது சட்டரீதியான கடமையினை நிறைவேற்ற ஆணையீட்டெழுத்தாணை அவரை நிர்ப்பந்திக்கும்”.

இந்த அறிவித்தலை நான் விடுப்பதற்கான காரணம், நேற்று இந்தச் சபையில் கௌரவ எதிர்க்கட்சித் தலைவர், 3 மாதங்களுக்குப் பாராளுமன்றத்திற்குச் சமுகமளிக்காத காரணத்தினால் கௌரவ ரஞ்சன் ராமநாயக்க அவரது ஆசனத்தினை வறிதாக்கியுள்ளார் என்றும் அவரது விடுப்புப் பிரேரணை ஏற்றுக்கொள்ளப்படாமையும் இந்த நிலைமைக்குப்

பங்களிப்பு வழங்கியுள்ளது என்றும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவருக்கு அறிவிப்பதற்குப் பாராளுமன்ற செயலாளர் நாயகம் நடவடிக்கை எடுத்துள்ளார் என அறிவித்தமையாகும். மேலே சுட்டிக்காட்டப்பட்டவாறு, இந்த நிலைப்பாடு சரியானது அல்ல என்பதையும் 3 மாதங்களுக்குப் பாராளுமன்றத்திற்குச் சமுகமளிக்காமையினால் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் ஆசனம் வறிதாகுதல் அரசியலமைப்பின் உறுப்புரை 66(ஊ) இனால் கருதப்படுகின்றது என்பதையும் உட்பொருள் மேலே விளக்கப்பட்டுள்ள செயலாளர் நாயகத்தினால் அனுப்பப்பட்ட கடிதம் உறுப்புரை 66(ஈ) இன் கீழானது என்பதையும் நான் கௌரவ எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இந்த விடயத்தில் சிறந்த தெளிவை வழங்குவதற்காக நான் இந்த விடயத்தினைச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.''

**2. பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 2019 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் முதலாவது தொகுதியின் XXII, XXIII மற்றும் XXIV ஆம் பகுதிகளையும், நான்காவது தொகுதியின் IX, X மற்றும் XI ஆம் பகுதிகளையும், ஐந்தாவது தொகுதியின் VII மற்றும் VIII ஆம் பகுதிகளையும் சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(2) சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விசேட கணக்காய்வு அறிக்கையின் எட்டாவது தொகுதியினது I ஆம் பகுதியின் உணவு ஆணையாளர் திணைக்களத்தினால் பாதுகாப்பான அரிசித் தொகையினைப் பராமரித்தல் மற்றும் சேமிப்புப் பயன்பாட்டின் செயல்திறன் தொடர்பிலான அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(3) நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2018 ஆம் ஆண்டுக்கான சனாதிபதி நிதியம் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கை அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 34 ஆம் பிரிவின் கீழ் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2021 பெப்ரவரி 23 ஆம் திகதிய 2216/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளை சமர்ப்பித்து அப்பத்திரத்தை இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்**: கல்வி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் தவிசாளர் கௌரவ (பேராசிரியர்) ஜீ. எல். பீரிஸ் அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட—

(i) 2018 ஆம் ஆண்டுக்கான இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள்;

(ii) 2018 ஆம் ஆண்டுக்கான களனிப் பல்கலைக்கழக பாளி, பௌத்த கல்விப் பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள்;

(iii) 2018 ஆம் ஆண்டுக்கான கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணணிக் கல்விக் கல்லூரியின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள்;

(iv) 2018 ஆம் ஆண்டுக்கான இலங்கை மொரட்டுவப் பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள்;

(v) 2018 ஆம் ஆண்டுக்கான பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் வருடாந்த அறிக்கைகளும் கணக்குகளும்;

(vi) 2018 ஆம் ஆண்டுக்கான இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள்;

(vii) 2018 ஆம் ஆண்டுக்கான களனிப் பல்கலைக்கழகத்தின் தொல்பொருள் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள்

(viii) 2018 ஆம் ஆண்டுக்கான இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள்;

(ix) 2018 ஆம் ஆண்டுக்கான களனிப் பல்கலைக்கழகத்தின் கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள்;

(x) 2018 ஆம் ஆண்டுக்கான இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள்;

(xi) 2018 ஆம் ஆண்டுக்கான பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளுக்கான பட்ட மேற்படிப்பு நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள்;

(xii) 2018 ஆம் ஆண்டுக்கான ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள்;

(xiii) 2018 ஆம் ஆண்டுக்கான இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள்;

(xiv) 2018 ஆம் ஆண்டுக்கான கொழும்பு பல்கலைக்கழகத்தின் உயிர் இரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிரியில் தொழில்நுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள்;

(xv) 2018 ஆம் ஆண்டுக்கான இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள்;

(xvi) 2018 ஆம் ஆண்டுக்கான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள்;

(xvii) 2019 ஆம் ஆண்டுக்கான றுஹுண பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள்;

(zviii) 2019 ஆம் ஆண்டுக்கான இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள்;

(xix) 2019 ஆம் ஆண்டுக்கான பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாயப் பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் ஆண்டிறிக்கை மற்றும் கணக்குகள்

(xx) 2019 ஆம் ஆண்டுக்கான மருத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள்;

(xxi) 2018 ஆம் ஆண்டுக்கான ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள்;

(xxii) 2018 ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள்;

(xxiii) 2019 ஆம் ஆண்டுக்கான இலங்கை பௌத்த பாளி பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை;

(xxiv) 2019 ஆம் ஆண்டுக்கான பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை;

(xxv) 2019 ஆம் ஆண்டுக்கான மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப நிறுவனத்தின் வருடாந்த அறிக்கையும் வருடாந்த கணக்குகளும்; மற்றும்

(xxvi) 2019 ஆம் ஆண்டுக்கான கொழும்பு பல்கலைக்கழகத்தின் சுதேச வைத்திய நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) மாவத்தகம, விக்ரமசிங்கபுர, இல. 73 இல் வதியும் திரு. கே. எல். என். சஹபந்துவின் 2020.10.03 திகதியில் சமர்பிக்கப்பட்ட மனுவை கௌரவ டீ. பீ. ஹேரத் சமர்ப்பித்தார்.

(2) அகலவத்த, கெகுலந்த, இல. 126 இல் வதியும் திரு. நிமல் ஜயசுந்தவின் 2021.01.15 திகதியில் சமர்பிக்கப்பட்ட மனுவை கௌரவ கயந்த கருணாதிலக சமர்ப்பித்தார்.

(3) மாத்தளை, ஔவிலிகந்த, வதேமட, இல. 26 வதியும் திரு. ஈ.ஜீ.என்.கே.பீ. சந்திரசேன 2021.01.04 திகதியில் சமர்பிக்கப்பட்ட மனுவை கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு:** பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம்,— விசேட பொருளாதார வலயமொன்றின் தாபிப்புக்கென ஏற்பாடு செய்வதற்கும்; பதிவுசெய்தல்கள், உரிமங்கள், அதிகாரவளிப்புகள், மற்றும் வேறு அங்கீகாரங்களை அளிப்பதற்கும் அத்தகைய வலயத்திலும் வலயத்திலிருந்தும் வியாபாரங்களையும் வேறு செயற்பாடுகளையும் கொண்டு நடாத்துவதற்கும் தத்துவமளிக்கப்பட்ட ஆணைக்குழுவொன்றை தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்தகைய வலயத்தினுள் செய்கின்ற வியாபாரத்தின் எளிதாக்கலின் மேம்படுத்துகைக்கான ஒற்றைச் சாளர முதலீட்டு வசதிப்படுத்துநரொருவரின் அடையாளப்படுத்துகைக்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்தகைய வலயத்தினுள் செயல்நுணுக்க முக்கியத்துவமான வியாபாரங்களின் மேம்படுத்துகைக்கான ஊக்குவிப்புகள் மற்றும் வேறு விலக்களிப்புகளைத் தீர்மானிப்பதற்கும் அளிப்பதற்கும்; அத்தகைய வலயத்தினுள் அரசாங்க சந்தைப்படுத்தப்படற்பாலதான காணி மற்றும் கருத்திட்டக் கம்பெனி சந்தைப்படுத்தப்படற்பாலதான காணி மற்றும் வளவுகளினதும் மற்றும் அதிலுள்ள கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளினதும் ஏற்பாடு செய்யப்பட்டவாறான கொடுக்கல் வாங்கல்களைச் செய்துகொள்வதற்கும்; அத்தகைய வலயத்தினுள் சர்வதேச

வர்த்தகம், கப்பற்றொழில் முகாமைத்துவ தொழிற்பாடுகள், கரைகடந்த வங்கித்தொழில் மற்றும் நிதிசார் சேவைகள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் வியாபார வழிமுறை, வெளியாட்களை பணிக்கமர்த்தல் முறை, கூட்டிணைக்கப்பட்ட தலைமையகங்களின் தொழிற்பாடுகள், பிராந்திய விநியோகத் தொழிற்பாடுகள், சுற்றுலாப் பயணத்துறை மற்றும் வேறு துணையாய சேவைகளை மேம்படுத்துவதற்கும் வசதிப்படுத்துவதற்கும்; அத்தகைய வலயத்தினுள் சர்வதேச பிணக்குத்தீர்வு நிலையமொன்றை தாபிப்பதற்கும்; நகர வசதி தொழிற்பாடுகள் மற்றும் அத்தகைய வலயத்தினுள் வதிவிட சமூகமொன்றின் குடியேற்றங்களை மேம்படுத்துவதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

சட்டமூலம் 2021 ஏப்ரல் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரண்டாவது முறையாக மதிப்பிடப்பட வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**6. இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் (திருத்தம்):** பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் சமர்ப்பித்த சட்டமூலம்,—1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

சட்டமூலம் 2021 ஏப்ரல் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரண்டாவது முறையாக மதிப்பிடப்பட வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**7. பாராளுமன்ற அமர்வு:** பாராளுமன்ற சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினாலும், 2020 ஒக்டோபர் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல், இன்றைய தினமும் 2021 ஏப்ரல் 09 ஆம் திகதி, வெள்ளிக்கிழமையும் சபை அமர்வு நேரம் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 12.30 வரையும் மற்றும் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 4.30 மணிவரையும் இருக்குமாக. மு.ப. 11.00 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 4.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. ஒத்திவைப்பு (2019 ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற குண்டுத்தாக்குதல் தொடர்பாக ஆராய்ந்து விசாரித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமாக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை) :** இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" எனப் பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

ஒத்திவைக்கப்பட்ட விவாதத்தை மீண்டும் தொடருவதற்கான கட்டளை வாசிக்கப்பட்டது. அதற்குரிய விடயம் (2021 ஏப்ரல் 07)

பிரேரணை மீண்டும் எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

(பி.ப. 1.30 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ ஹர்ஷண ராஜகருணா தலைமை தாங்குவாராக" என அறநெறிப் பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் பிக்குமார் கல்வி இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 1.45 மணிக்கு கௌரவ ஹர்ஷண ராஜகருணா தலைமை தாங்கினார்.)

“கௌரவ பிரேம்நாத் சீ. தொலவத்த தலைமை தாங்குவாராக” என அறநெறிப் பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் பிக்குமார் கல்வி இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.31 மணிக்கு கௌரவ பிரேம்நாத் சீ. தொலவத்த தலைமை தாங்கினார்.)

அவ்வேளை, நேரம் பி.ப. 4.30 மணியாகிவிடவே விவாதம் ஒத்திவைக்கப்பட்டது. அதிலிருந்து விவாதம் 2021 ஏப்ரல் 09 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடரும்.

அவ்வேளை நேரம் பி.ப. 4.30 மணிக்கு தலைமைதாங்கும் உறுப்பினர் இன்றையதின சபைத் தீர்மானத்திற்கிணங்க பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம் 2021 ஏப்ரல் 09 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.